பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 27 திங்கட்கிழமை 14.11.2022 கதிர் 261

## எரிபொருளுக்கு இனி மேலதிக வரி

எரிபொருளுக்கு மேலதிக வரி விதிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அதன்படி, டீசல் மற்றும் கச்சா எண்ணெய், பெற்றோல் மீது இந்த புதிய மேலதிக வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட அறிக்கையை இன்று 2

# ‘மொட்டு’விலிருந்து வெளியேறிய அறுவர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இன்று சங்கமம்

## சஜித் நன்றி தெரிவிப்பு; ஏனையோருக்கும் அழைப்பு







ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்கிய குழுவொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இன்று கூட்டணி அமைத்தது. 2

## பேச்சுக்குச் செல்ல முன் நிபந்தனை விதியுங்கள்

### தமிழ்க் கட்சிகளுக்கு டலஸ் ஆலோசனை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று பேச்சு மேசைக்குத் தமிழ்க் கட்சிகள் செல்வதாயின் ஜனாதிபதியிடம் நிபந்தனைகளை முன்வைக்க வேண்டும்.

– இவ்வாறு சுதந்திர 2

## எங்களை நம்பவைத்து கழுத்தறுத்தார் கோட்டா

### டலஸ் கடும் சீற்றம்



குடும்ப அரசியலை முன்நிறுத்தாது புதிய அரசியல் முறைமை ஒன்றை உருவாக்கு–வார் என்று நம்பித்தான் கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கினோம். ஆனால், 2

## நெருப்போடு விளையாட முயலக்கூடாது ஆளுநர்

### சிறீகாந்தா எச்சரிக்கை




வடக்கு மாகாண ஆளுநர் நெருப்போடு விளையாடுவதற்கு முயற்சிக்கக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ந.சிறீகாந்தா வலியுறுத்தினார். 8

## பெண்களுடன் சேட்டை; 14 பேர் மடக்கிப் பிடிப்பு

### பருத்தித்துறையில் பொலிஸார் அதிரடி

பருத்தித்துறை பொலிஸாரின் அதிரடியான சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பருத்தித்துறை நகர் பகுதிகளில் பெண்களுடன் தொடர்ச்சியாகச் சேட்டைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்பு இன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## சர்வதேசத்துக்குக் கடனாளியாகி விருந்துபசாரம் நடத்த முடியாது!

### 2023ஆம் ஆண்டு ‘பட்ஜட்’டைச் சமர்ப்பித்து ரணில் தெரிவிப்பு



8.3 வீதமாக உள்ள மொத்த தேசிய வருமானத்தை 2025 ஆம் ஆண்டில் 15 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று 2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், உலகுக்குக் கடனாளியாகி விருந்துபசாரம் நடத்த இனியும் முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 8

## 40 கிலோ கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது



(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட சுமார் 40 கிலோகிராம் கஞ்சா கடற்படையினரால் 2

## காணியைப் படையினருக்கு தாரைவார்க்க இடமளியோம்

### மாவை திட்டவட்டம்




வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் அவரின் செயலகத்தில் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்குடன் – அந்தக் காணிகளைப் படையினருக்கு வழங்கும் திட்டத்துடன் நாளை செவ்வாய்க்கிழமை கூட்டம் நடைபெறுமாக இருந்தால் அதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். 2

## கொழும்பில் ஹிருணிகா கைது







ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு–கறுவாத்தோட்டைப் பொலிஸாரால் இன்று பகல் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டம், ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டமை உள்ளிட்ட காரணங்களின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் 2

## காணியை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு மாகாணத்தில் அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கும்படியே நாங்கள் கோரி வருகின்றோம்.

நல்லாட்சியில் எமது கோரிக்கையின் பிரகாரம் வடக்கில் ஏராளமான காணிகள் விடுவிக்கப்பட்டன. அதேபோல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆட்சியிலும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றே கோருகின்றோம்.

வடக்கில் ஆளுநர் காணிகளைச் சுவீகரித்துப் படையினருக்குத் தாரை வார்க்க நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் – என்றார்.

## கொழும்பில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இன்றும் அவர் அரசுக்கு எதிராகப் போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தார். அவ்வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

## 40 கிலோ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், குருநகர் கடல் பகுதியில் வைத்து கடற்படையினரால் மீட்கப்பட்ட இந்தக் கஞ்சாவைக் கடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கஞ்சாவைக் கடத்தி வரப் பயன்படுத்தப்பட்ட படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எங்களை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் எம் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார்.

– இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குக் கடும் போராட்டம் நடத்தினோம்

அந்தப் போராட்டத்தின் விளைவாகத் தான் கோட்டாபய ராஜபக்சவை வேட்பாளராகத் தெரிவு செய்தோம்.

அவர் ராஜபக்ச குடும்ப அரசியலை நிலைநிறுத்தமாட்டார். அரசியல் முறைமை மாற்றம் ஒன்றைச் செய்வார் என்று நம்பினோம்.

அவர் ராஜபக்ச குடும்பம் அணியும் சால்வையைக்கூட அணிய மறுத்தார். இதனால் அவர் மீது பெரிய நம்பிக்கை ஒன்று இருந்தது எங்களுக்கு. ஆனால், அவர் இறுதியில் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார் – என்றார்.

## பேச்சுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெரும எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புவது போல் புதிய அரசமைப்புக்கும், அரசியல் தீர்வுக்கும் முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் மாத்திரம் தமிழர்களின் பிரச்சினை இல்லை. அவர்களுக்குப் பல பிரச்சினைகளை உண்டு. எனவே, அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காலத்தை இழுத்தடிக்காமல் குறுகிய காலத்தில் – அடுத்த வருடத்தில் தீர்வு காணப்படும் நோக்குடன் பேச்சுக்கள் அமைய வேண்டும்.

அதன் பிரகாரம் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படுமாயின் அதனை நாங்கள் ஆதரிப்போம்.

ஆனால், ஜனாதிபதி தலைமையிலான அரசு தீர்வுத் திட்ட விடயத்துக்கு இறங்கி வருமா என்பது சந்தேகம். அதேவேளை, இந்த அரசு நிலையான அரசும் இல்லை.

'மொட்டு'வின் ஆட்சியையும் தனது ஜனாதிபதி பதவியையும் தக்கவைக்கும் நோக்குடன் தமிழ்த் தரப்பினரை பேச்சு என்ற மேசைக்கு அழைத்து காலத்தை வீணடிக்கின்ற ரணில் விக்கிரமசிங்க முயல்கின்றாரா என்ற சந்தேகம் எம்மிடம் உண்டு. இதை உணர்ந்து தமிழ்த் தரப்பினர் தத்தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். எனது நிலைப்பாட்டை அறிந்து தான் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்காமல் என்னை ஆதரித்தார்கள் – என்றார்.

## மொட்டுவிலிருந்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பிரகாரம் அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ஜோன் செனவிரத்ன, ஜயரத்ன ஹேரத், பிரியங்கர ஜயரத்ன ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவே இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இவ்வாறு முன்வந்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும், எதிர்காலத்தில் மேலும் வலுவாகவும் கூட்டாகவும் செயற்படுவதற்கு இந்த ஒற்றிணைவு மிகவும் முக்கியமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

மக்களின் நலன் கருதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிய ஏனையோரும் தம்முடன் இணைய வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு விடுத்தார்.

நீண்டகாலமாக நடத்தப்பட்ட பல கலந்துரையாடல்களின் பிரதிபலனாக இவ்வாறு ஒன்றிணைந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் பலமான சக்தியாக ஐக்கிய மக்கள் கூட்டணியைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்பதாகவும் அனுர பிரியதர்ன யாப்பா இதன் போது தெரிவித்தார்.

## எரிபொருளுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இறக்குமதியின் போது இந்த மேலதிக கட்டணம் வசூலிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியலில் வரவும் செலவும்

அதிசயங்கள், எதிர்பாராத திருப்பங்கள், நம்ப முடியாத மாற்றங்கள், விவகாரமான விபரீதங்கள் போன்றவை இடம்பெறுவதுதானே அரசியல்?

அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தரப் பகைவனும் இல்லை என்றும் சொல்வார்கள்.

இவையெல்லாம் தனக்கும் விதிவிலக்கல்ல என்று தென்னிலங்கை அரசியல் தொடர்ந்து அவற்றை வெளிப்படுத்தி வருகின்றது.

எதிரணிப் பக்கத்தில் இருக்கும் அரசியல்வாதிகள் பதவி, வருமானம், சொகுசு வசதிகள், செல்வாக்கு போன்ற இன்னோரன்ன சுகநலங்களை எதிர்பார்த்து ஆளும் பக்கம் தாவுவதுதான் இலங்கை அரசியலின் பொதுவான போக்கு.

அதுவும் இன்றைய வரவு – செலவு திட்டத்தை ஒட்டி அப்படிக் கட்சி மாற்றங்கள் – காட்சிக் கோலங்கள் – அரசியல் குத்துக்கரணங்கள் – தாராளமாக அரங்கேறும் என எதிர்வு கூறல்கள் பல மட்டங்களில் வெளிப்படுத்தப்பட்டு வந்தன.

ஆனால், விடயம் மாறி நடந்திருக்கின்றது. முன்னர் ஆளும் பக்கத்தில் இருந்து, பின்னர் அதிலிருந்து வெளியேறி, இரண்டும் கெட்டான் நிலையில், அந்தப் பக்கமும் இல்லாமல், இந்தப் பக்கமும் இல்லாமல், தனி அணியாகச் செயற்பட்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறுவர் கடைசியாக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஐக்கியமாகி இருக்கிறார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன தரப்பில் போட்டியிட்டு, வெற்றியீட்டி, அதில் அமைச்சர் பதவிகளையும் வகித்து வந்த சிரேஷ்ட எம்.பிக்களான அநுரா பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, ஜயரத்தின ஹேரத், சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, ஜோன் செனிவிரத்ன, பிரியங்க ஹேரத் ஆகியோர் கடைசியில் சஜித் பக்கத்தில் வந்து கரை சேர்ந்திருக்கின்றனர்.

ஆளுங்கட்சியைப் பொறுத்தவரையில் இது அவர்களுக்குப் புதிய இழப்பல்ல. ஏற்கனவே இந்த அறுவரும் அரசுத் தரப்பில் இருந்து வெளியேறி மதில் மேல்தான் இருந்து கொண்டு, அரசை விமர்சித்தும் வந்தனர்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்த வரையில் இது அவர்களுக்கு கனத்த லாபம். அரசியல் ரீதியாக வலிமையைக் கூட்டும் – காட்டும் – ஒரு நிகழ்வு.

பிரதான எதிர்க்கட்சிக்கு இது வரவு. அதனால் அவர்கள் மகிழலாம்.

ஆயினும், சில செலவுகளும் ஐக்கிய மக்கள் சக்திக்குக் காத்திருக்கின்றன எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் பேசுகின்றன.

இன்று மேற்படி ஆறு எம்.பிக்களையும் வரவேற்கும் நிகழ்வு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் ஒன்று கூடல் அறையில் நடைபெற்ற போது, அங்கு பிரசன்னமாகி இருந்த சில எதிரணி எம்.பிகள் விரைவில் அக்கட்சியின் செலவுப் பக்கத்தில் பதிய வேண்டியவர்களாகிவிடுவர் என்று கூறப்படுகின்றது.

இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா…!

# விமல் வீரவன்ஸவின் கூட்டத்தில் பதற்றம்!

## தலைதெறிக்க தப்பி ஓடிய அரசியல்வாதிகள்



கண்டியில் விமல் வீரவன்ஸ உள்ளிட்டோர் நடத்திய அரசியல் கூட்டத்திற்கு மக்கள் குழுவினர் எதிர்ப்பு வெளியிட்டதால் அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

கூட்டம் முடிவடைந்து விமல் வீரவன்ஸ உள்ளிட்ட அரசியல்வாதிகள் வெளியேறிய போது, அங்கிருந்த இளைஞர்கள் அவர்களை கூச்சலிட்டு கடுமையாகத் திட்டியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு மத்தியில் விமல் வீரவன்ஸ தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் கூட்டம் நடைபெற்ற மண்டபத்தை விட்டு வாகனத்தில் வெளியேறியனார்.

இருப்பினும் கடும் எதிர்ப்பு காரணமாக வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண உள்ளிட்டோர் வெளியே வரமுடியாமல் மண்டபத்திற்குள் முடங்கி இருந்தனர்.

பின்னர் வாசுதேவ மற்றும் திஸ்ஸ விதாரணவும் எதிர்ப்புக்கு மத்தியில் தமது வாகனங்களில் ஏறிச் சென்ற வேளையில் இரு தரப்பினருக்கும் இடையில் பதற்றமான நிலைமை தொடர்ந்தது. சுமார் 15 நிமிடங்களுக்கு இரு தரப்பினருக்கும் இடையில் பதற்றமான நிலைமை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்துக்கு ஆதரவு!

## சாகர பகிரங்க அறிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்துக்கு பூரண ஆதரவை வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

வரவு – செலவுத் திட்டத்துக்கான ஆதரவு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இன்று சமர்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை பரிசீலித்த பின்னர் ஆதரவை வழங்குவது தொடர்பாகத் தீர்மானிப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# குருநகர் தேவாலய படுகொலை 29ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான விமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 29 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

கடந்த 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி காலை திருப்பலி வழிப்பாட்டுக்கு மக்கள் கூடியிருந்த வேளையில் இலங்கை விமான படையின் ‘சுப்பர் சொனிக்’ விமானங்கள் ஆலயத்தின் மீது குண்டு வீசியதில் 08 வயது சிறுமி உள்ளிட்ட 13 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தமையுடன் 25 இற்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை திருப்பலியின் நிறைவில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றதோடு உயிரிழத்தவர்களின் உறவினர்கள் மலர் தூபி அஞ்சலியும் செலுத்தினர்.

மேற்படி தேவாலயம் 1861 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1881 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# குரங்கம்மை நோயாளிகளுக்கு தேசிய தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவில் சிகிச்சையளிப்பு!

இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள குரங்கம்மை நோயாளிகளுக்கு தேசிய தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவில் சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுவின் பணிப்பாளர் வைத்தியர் ஹசித அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையில் குரங்கம்மை நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு பேர் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை இவர்கள் டுபாயிலிருந்து இலங்கை வந்தவர்கள் எனவும் அவர் கூறினார்.

மேலும் குரங்கம்மை நோய்க்கான அறிகுறிகளை இலகுவாக அடையாளம் காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உலக மக்கள் தொகை நாளை 800 கோடியைத் தொடுகிறது!




## ஐக்கிய நாடுகள் சபைத் தகவல்

நியூயோர்க், நவ.14

பூமியின் மக்கள. தொகை உயர்வடைந்து செல்கின்ற நிலையில் நாளை (செவ்வாய்க்கிழமை) உலக மக்கள் தொகை 800 கோடி ஆகவுள்ளதாக ஐ.நாவின் புதிய மக்கள் தொகை மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமியில் மனிதர்களின் எண்ணிக்கை 800 கோடி ஆகப்போகும் தகவல், கடந்த ஜூலை 11ஆம் திகதி ஐ.நா வால் வெளியிடப்பட்டது. உலக மக்கள்தொகை தினமான அன்றைய நாளில்வெளியானஐ.நா. உலகமக்கள்தொகை வாய்ப்பு 2022 அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் தெரிவிக்கையில்– நமது பன்முகத்தன்மையை கொண்டாடுவதற்கான, பொது மனிதநேயத்தை அங்கீகரிப்பதற்கான, வாழ்நாளை நீட்டித்து, மகப்பேறுகால மற்றும் குழந்தை இறப்பு விகிதத்தை வெகுவாக குறைத் துள்ள மருத்துவத்துறையின் மகத்துவத்தை போற்றுவதற்கான நேரம் இது என்றார்.

மேலும்,உலக மக்கள்தொகை 800 கோடியை எட்டுவது, நமது பூமியைக் காக்கும் நம்முடைய கூட்டுப் பொறுப்பை நினைவூட்டும் விடயமும் ஆகும். நமது பொறுப்புகளில் எங்கே பின்தங்கியிருக்கிறோம் என்று சிந்திப்பதற்கான நேரமும் இதுஎன்றார்.

2050ஆம் ஆண்டளவில், உலக மக்கள்தொகையில் பாதிக்கு மேல், இந்தியா, பாகிஸ்தான், கொங்கோ, எகிப்து, எத்தியோப்பியா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தான்சானியா ஆகிய 8 நாடுகளிலேயே அடங்கியிருக்கும் என்றும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள்தொகை 700 கோடியில் இருந்து 800 கோடி ஆவதற்கு 12 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், இதிலிருந்து 900 கோடியைத் தொடுவதற்கு 15 ஆண்டுகள் ஆகும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இது ஒட்டுமொத்த உலக மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் குறைந்து வருவதை காட்டுகிறது என நிபுணர்கள் தெரிவித்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது..

# இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதலில் இரு சிரிய வீரரர்கள் பலி; மூவர் காயம்



டமாஸ்கஸ், நவ.14

சிரிய இராணுவத் தளத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் சிரியா நாட்டு இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரியா நாட்டில் கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வருகின்றமையுடன் கடந்த 2011 முதல் நடைபெற்று வரும் இந்த போரால் பெண்கள், குழந்தைகள் உள்பட அந்நாட்டின் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டும் வருகின்றனர். எனினும், போர் முடிவுக்கு வராமல் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், சிரியாவின் ஹோம்ஸ் மாகாணத்தில் உள்ள இராணுவ விமானதளத்தைக் குறி வைத்து இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக சனா நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள ஈரான் ஆதரவு போராளிகளின் நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் நடத்திய இந்த வான்வழி ஏவுகணைத் தாக்குதலில் சிரியாவை சேர்ந்த 2 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என்றும், மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# ஸ்பெயினின் கிழக்குப் பகுதியில் கனமழை, வெள்ளத்தால் பாதிப்பு




மேட்ரிட், நவ.14

கிழக்கு ஸ்பெயின் நாட்டில் கனமழையால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தெருக்கள், வீடுகள், வாகனங்கள் அனைத்தும் மழை நீரில் மூழ்கியுள்ளன. மேலும், மோசமான வானிலை காரணமாக வாலன்சியா விமான நிலையத்தில் பல விமானங்கள் பல மணி நேரம் தாமதாக புறப்பட்டன என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

அங்குள்ள அல்டாயா நகரில் உள்ள ஒரு பள்ளத்தாக்கில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் அங்கு மறு அறிவிப்பு வரும் வரை ஓடுபாதையை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பல பகுதிகளில் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மக்களைக் காப்பாற்றும் பணிகளை மீட்புப் படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

நடப்பு ஆண்டில் 2 ஆவது முறையாக கிழக்கு ஸ்பெயினில் கனமழை பெய்து வருகிறது. இதற்கு முன்பு கடந்த மே மாதம் பெய்த மழையால் அங்கு கடுமையான வெள்ப் பாதிப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இஸ்தான்புலில் குண்டுவெடிப்பு அறுவர் பலி, 53பேருக்கு காயம்







இஸ்தான்புல், நவ.14

துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதுடன், 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்புல்லின் பரபரப்பான இஸ்திக்லால் கடை வீதி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை குண்டுவெடிப்பு நடந்துள்ளது. இந்த பிரதான நடைபாதை வீதியில் ஏராளமானோர் வழமையாக ஒன்று கூடுகின்ற நிலையில் இங்கு பல கடைகள் மற்றும் உணவகங்கள் உள்ளன. இந்நிலையிலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இங்கு இதற்கு முன் 2015 மற்றும் 2017 இல் குண்டுவெடிப்புகள் நடந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெடிவிபத்தையடுத்து அந்தப் பகுதியில் பரபரப்பான சூழல் உருவாகியிருந்ததுடன், மீட்பு பணிகளும் இடம்பெற்றுள்ளன. குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து அப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டமையுடன் அப்பகுதியில் கடைகள் அடைக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. வெடிவிபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் தற்போது இந்தக் குண்டுவெடிப்பு பயங்கரவாதத் தாக்குதல் என்று கூறப்படுவதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# சென்னையில் சீரற்ற வானிலையால் விமானங்கள் பயணிப்பதில் நெருக்கடி



சென்னை, நவ.14

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறமையால், சென்னை மீனம்பாக்கம் உள்நாட்டு முனையத்தில் இருந்து நேற்று மாலை 5.10 மணிக்கு மதுரை செல்ல வேண்டிய விமானமும், மதுரையில் இருந்து இரவு 8.30 மணிக்கு சென்னை வர வேண்டிய விமானமும் ரத்து செய்யப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

அதேபோல் தூத்துக்குடியில் இருந்து மாலை 5.30 மணிக்கு சென்னைக்கு வரவேண்டிய விமானமும் ரத்து செய்யப்பட்டது. மேலும் லண்டனில் இருந்து அதிகாலை 5.30 மணிக்கு சென்னைக்கு விமானம் வந்துவிட்டு, மீண்டும் சென்னையில் இருந்து காலை 7.30 மணிக்கு லண்டன் புறப்பட்டு செல்லும். ஆனால் சென்னையில் தொடர்ந்து பெய்து வரும் மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக விமான நிறுவனம், 6 மணி நேரம் தாமதமாக பகல் 1.30 மணிக்கு சென்னையில்

இருந்து லண்டன் புறப்படுவதாக பயண திட்டத்தை மாற்றி அமைத்ததாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பயணிகளுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதேபோல் சென்னையில் இருந்து திருச்சி, சீரடி, கோவா, மும்பை, ஹாங்காங் போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டிய விமானங்களும் சுமார் ஒரு மணி நேரம் வரை தாமதமாகப் புறப்பட்டு சென்றன. பயணிகளுக்கு விமானம் தாமதம் மற்றும் ரத்து பற்றிய தகவல்கள் முன்னதாகவே தெரிவிக்கப்பட்டதால் பாதிப்பு எதுவும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சென்னை விமான நிலையத்தில் ஐந்தே கால் கிலோ தங்கம் மீட்பு



சென்னை, நவ.14

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் பெரும் அளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து, சுங்க இலாகா அதிகாரிகள் விமான பயணிகளை தீவிரமாகக் கண்காணித்தனர்.

அப்போது துபாயில் இருந்து வந்த 2 விமானங்களில் பயணம் செய்த ராமநாதபுரம் மற்றும் சென்னையைச் சேர்ந்த 6 பேரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரித்தனர். அதிகாரிகளிடம் அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பேசியதால் அவர்களது உடைமைகளை சோதனை செய்தனர். ஆனால் அதில் எதுவும் இருக்கவில்லை.

பின்னர் 6 பேரையும் தனி யறைக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அதில் அவர்கள் உள்ளாடைக்குள் மறைத்து வைத்து இருந்த 300 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்தனர்.

மேலும் அவர்களிடம் இருந்த அட்டை பெட்டிகளை சோதனை செய்த போது அதில் தங்கத்தை மறைத்து வைத்துக் கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். இதில் இருந்த 4 கிலோ 967 கிராம் தங்கத்தை கைப்பற்றினார்கள்.

இந்தச் சோதனையில் 6 பேரிடம் இருந்தும் ரூ.2 கோடியே 35 லட்சம் மதிப்புள்ள 5 கிலோ 267 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக 6 பேரையும் சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்து விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பஞ்சாப்பில் நில நடுக்கம்; உயிர்ச் சேதம் ஏதுமில்லை



அமிர்தசஸ், நவ.14

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் அருகே இன்று அதிகாலை 3.42 மணியளவில் திடீரென்று நிலநடுக்கம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனை தேசிய நிலநடுக்கவியல் மையம் அறிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் 4.1 ரிக்டர் ஆகப் பதிவானது என்றும் 120 கி.மீ. தொலைவுக்கு இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. இதில் சேதம்எதுவும் ஏற்படவில்லை. அத்துடன், டெல்லி மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் கடந்த வாரம் 2 நிலநடுக்கங்கள் ஏற்பட்டிருந்தன.

முதல் நிலநடுக்கம் கடந்த 9ஆம் திகதி நேபாளத்தை மையமாக கொண்டு 6.3 ரிக்டர் ஆகப் பதிவானது. 2 ஆவது நிலநடுக்கம் நேபாளத்தில் கடந்த 12ஆம் திகதி 5.4 ரிக்டர் அளவில் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து தற்போது பஞ்சாப்பில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செங்குன்றத்தில் கடத்தப்பட்ட செம்மரக் குற்றிகள் பிடிபட்டன



சென்னை, நவ.14

செங்குன்றத்தை அடுத்த அலமாதியில் இருந்து செங்குன்றம் நோக்கி மினி வானில் செம்மரக்கட்டைகள் கடத்தி வரப்படுகின்றன எனக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, எடப்பாளையம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்ட பொலிஸார், அப்போது அந்த வழியாக

செங்குன்றம் நோக்கி வந்த மினிவானை மறித்து சோதனை செய்தனர்.

அதில் 200 கிலோ செம்மரக்கட்டைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இது சம்பந்தமாகச் சென்னை கொளத்தூர் திருமால் நகரைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். கடத்தி வரப்பட்ட செம்மரக்கட்டைகளுடன், மினி வானையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அந்த செம்மரக்கட்டைகளை எங்கிருந்து, எங்கு கடத்தி செல்லப்படுகின்றன என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட செம்மரக்கட்டைகளின் மொத்த மதிப்பு ரூ.5 லட்சம் எனக் கூறப்படுகிறது.

## இந்தியாவுக்கு எதிரான வாசகங்கள் வைத்திருந்த இளைஞர் கைது..!!



சென்னை ராயபுரம் கல்மண்டபம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்ட பொலிஸார், அந்த வழியாக ஒரே மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேரை சந்தேகத்தின் பேரில் விசாரித்துள்ளனர்.

மேலும் அவர்களிடம் இருந்த பையில் இந்திய நாட்டுக்கு எதிரான சில கருத்துகள் அடங்கிய வாசகம் எழுதி வைக்கப்பட்டிருந்த புத்தகமும் இருந்ததாகத் தெரிகிறது.

இதையடுத்து 3 பேரிடமும் பல மணிநேரம் நடந்த விசாரணைக்கு பிறகு அவர்களில் ஒருவர் மீது, ராயபுரம் பொலிசார் 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

பின்னர் அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மற்ற 2 பேரையும் எச்சரித்து அனுப்பியுள்ளனர். தமிழகம் முழுவதும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தி வரும் நிலையில் இச்சம்பவம் வட சென்னை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காணி மீட்பில் தமிழர்களின் ஒற்றுமையை முஸ்லிம்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்

## ஹசன் அலி கோரிக்கை






(பாரூக் சிஹான்)

நாங்கள் கிட்டத்தட்ட 62 ஆயிரம் ஏக்கர் காணிகளை இழந்து இருக்கின்றோம். ஆனால் தமிழ் மக்களுக்கு வடக்கு மற்றும் மட்டக்களப்பில் ஏதாவது காணிப் பிரச்சினை வந்தால் அதற்காக எல்லோருமே ஒற்றுமையாகப் போராடி நிறைய விடயங்களைச் சாதித்திருக்கின்றார்கள். இன்றும் கூட தமிழ் மக்களின் பிரதேசங்களில் காணிகள் கையகப்படுத்தப்படும் சந்தரப்பங்கள் இருந்து வருகின்ற நிலையில் அதற்கு காரணமானவர்களை ஒன்று கூடி அவர்கள் விரட்டி அடிக்கின்றார்கள். ஆனால் அம்மக்களிடம் இருக்கின்ற ஒற்றுமை எங்களிடத்தில இல்லை – என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் கட்சியின் கிராமிய அமைப்பாளர்கள் சந்திப்பு தொடர்பில் இன்று அம்பாறை மாவட்டம் கல்முனைப் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:–

இந்தச் சமூகத்தில் உள்ள ஊழல்வாதிகள், பொய் வாக்குறுதி கொடுத்து மக்களை ஏமாற்றுபவர்கள், முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொடுக்காமல் அதை அப்படியே மானபங்கபடுத்தி பெரும்பான்மை சமூகத்திற்கு விட்டு கொடுத்து தங்களை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை தேடிக் கொள்கின்ற அந்த கேவலமான செயல்களைச் செய்பவர்கள் போன்றோரின் நசவடிக்கைகளில்வ்இருந்து நாங்கள் விடுபட வேண்டும்.

வாக்குகளை வாங்குவதற்கு எதையுமே தர மாட்டோம். கொள்கைகளை மட்டும் பேசுவோம் என்று செயற்படுவோம்.

இன்று அஷ்ரப்பின் கொள்கைத் திட்டங்களுக்கு அப்பால் கிழக்கு முஸ்லிம் மக்களுக்கு எதுவுமே நடக்கவில்லை. நாங்கள் கிட்டத்தட்ட 62 ஆயிரம் ஏக்கர் காணிகளை இழந்து இருக்கின்றோம். ஆனால் தமிழ் மக்களுக்கு வடக்கு மற்றும் மட்டக்களப்பில் ஏதாவது காணிப் பிரச்சினை வந்தால் அதற்காக அவர்கள் எல்லோருமே ஒற்றுமையாகப் போராடி நிறைய விடங்களைச் சாதித்திருக்கின்றார்கள். இன்றும் கூட தமிழ் மக்களின் பிரதேசங்களில் காணிகள் கையகப்படுத்தப்படும் சந்தரப்பங்கள் இருந்து வருகின்ற நிலையில் அதற்கு காரணமானவர்களை ஒன்று கூடி அவர்கள் விரட்டி அடிக்கின்றார்கள். ஆனால் அம்மக்களிடம் இருக்கின்ற ஒற்றுமை எங்களிடத்தில இல்லை. ஆனால் எமது ஊர்கள் யாவும் தற்போது ஒரு தனியான தீவுகளாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறான பிரதேச வாதங்களினால் தான் வெளியூர் தலைவர்கள் என கூறப்படுபவர்கள் இங்கு வந்து எமக்கு மேல் நின்று கொண்டு எங்களது பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்கள் வித்தியாசமான அரசியலை செய்கின்றார்கள்.இதற்கு பிரதான காரணம் பிரதேசவாதமாகும். எனவே தான் ஒவ்வொரு கிராமமும் தனித் தனியாக சிந்திப்பதை தவிர்க்க வேண்டும்.

ஆகவே எதிர்கால சந்ததிகளுக்காகவது நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

தற்போதுதலைவர் அஷ்ரப் உருவாக்கிய கட்சியில் மன்னிப்பு எல்லாம் கொடுக்கின்றார்கள். எதற்காக மன்னிப்பு கொடுக்கப்படுகின்றது? யார் கொடுக்கின்றார்கள்? மன்னிப்பிற்கான விழுமியங்கள் எமது மார்க்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்விழுமியங்களை மதிக்காது பொதுமன்னிப்பு வழங்கப்படுகின்றது.

எதற்காக பொது மன்னிப்பு கொடுக்கின்றார்கள்? கட்சியின் கொள்கைளை மீறியதற்காக. சமூகத்தையும் கட்சியையும் ஏமாற்றி ஒரு தனி நபர் செயற்படுவது என்பது எமக்கு ஏமாற்றமளிக்கின்றது. – எனக் குறிப்பிட்டார்.

மேலும் எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல் என்கின்ற விடயம் தொடர்பாக ஐக்கிய மக்கள் கூட்டமைப் பின் நிலைப்பாடு தொடர்பில் மக்களிடம் கருத்துக்களை அவர் கேட்டறிந்து கொண் டார்.அத்துடன் இக்கூட்டத் துக்கு வருகை தந்த பொதுமக்களிடம் கட்சியின் பிரதான கொள்கை மற்றும் எதிர்காலத் தேர்தல் குறித்தும் எம்.ரி. ஹசன் அலி விரிவாக விளக்கமளித்தார்.

இக்கூட்டத்தில் கட்சி முக்கியஸ்தர்களான சரீப் முகமட் ஹக்கீம் மற்றும் ஏ.எம் அஹுஃவர் ஆகியோர் இணைந்திருந்தனர்.

# தொற்றா நோய்கள் தொடர்பாக கல்முனையில் பயிற்சி பட்டறை





(நூருல் ஹுதா உமர்)

உலக வங்கி மற்றும் இலங்கை சுகாதார அமைச்சு இணைந்து அமுல்படுத்தும் ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான PSSP எனும் செயற்றிட்டத்தின் கீழ் கல் முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரதேச வைத்தியசாலைகள் மற் றும் இத்திட்டத்திற்காகத் தேர்வான ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான மூன்று நாள் தொற்றா நோய்கள் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம் மாஹினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிற்சிப்பட்டறையில் தொற்றா நோய் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ் இர்சாத் பிரதான வளவாளராக கலந்து கொண்டார். பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ அப்துல் வாஜித் விசேட பயிற்சிகளையும் பொதுமக்கள் முறைப்பாட்டு மைய நிறுவுகையின் அவசியம் பற்றியும் வழிகாட்டல்களை வழங்கினார்.

இந்நிகழ்வின் ஆரம்ப தினத்தில் தர முகாமைத்துவ பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் பீ.ஜீ.பீ.டேணியலினால் உத்தியோகத்தர்களின் வேலை பிரிப்பு மற்றும் பொறுப்புக்களை நேர்த்தியாக செய்தல் தொடர்பில் விசேட உரை ஒன்றும் நிகழ்த்தப்பட்டது. மூன்று நாள் பயிற்சியை பெற்றுக் கொண்ட குறித்த தாதிய உத்தியோகத்தர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இணைந்து வைத்தியசாலைகளில் தொற்றா நோய்கள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதுடன் அதனைக் கணினியில் பதிவேற்றம் செய்து பொதுமக்கள் முறைப்பாட்டு மையத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்காக அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# சாய்ந்தமருதில் பிரதேச நல்லிணக்கக் குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வும் பயிற்சிப் பட்டறையும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

'சமாதானமும் சமூகப் பணியும்' எனும் நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டு வரும் செயற்பாடுகளில் ஒன்றாக சாய்ந்தமருது பிரதேச நல்லிணக்க குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வும், ஒரு நாள் பயிற்சிப் பட்டறையும் 'சமாதானமும் நல்லிணக்கமும்' என்ற தொனிப்பொருளில் நேற்று இடம்பெற்றது.

இதில் சமூகங்களுக்கிடையே எவ்வாறு சமூக ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தலாம், சிவில் சமூகத்தின் தற்கால வகிபாகம் என்ன, எதிர்காலத்தில் சமூக ஒற்றுமைக்காக அம்பாறை மாவட்டத்தில் என்ன செயற்பாடுகளை மேற்கொள்ளலாம், மூவினங்களுக்கிடையே தொடர்ந்தும் ஒற்றுமையைத் தக்க வைத்துக்கொள்ள என்ன வழிமுறைகளை முன்னெடுக்கப்படலாம் என்ற பல விடயங்கள் பற்றிக்லந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் நிறுவனத்தின் பிராந்திய திட்ட ஆலோசகர் எம்.எஸ். ஜலீல் வளவாளராகக் கலந்து கொண்டார்.

முழுநாள் செயல் திட்டமாக இடம்பெற்ற இந்நிகழ்வில், 30 உறுப்பினர்கள் புதிதாக இணைந்து கொண்டனர்.

'சமாதானமும் சமூகப் பணியும்' நிறுவனம், நாட்டில் சமாதானம் மற்றும் சமூக ஒற்றுமையை இனங்களுக்கு இடையில் ஏற்படுத்துவதற்காகச் செயற்பட்டு வரும் ஒரு சமூக நிறுவனமாகும்.

இப்பயிற்சிப் பட்டறையில் சமாதானமும் சமூக நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தேசமான்ய ரீ. ராஜேந்திரன், திட்ட உத்தியோகத்தர் எம்.எல்.ஏ. மாஜித், மாவட்ட நல்லிணக்க குழு இணைப்பாளர் எஸ்.எல்.அஸீஸ், சாய்ந்தமருது பிரதேச சமாதான சமூகப்பணி நல்லிணக்க குழு இணைப்பாளர் அகமட்லெப்பை ஆதம்பாவா, மாவட்ட செயலக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.ஏ. இர்பான் மற்றும் பிரதேச நல்லிணக்க குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# நடுத்தர மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக வரவு – செலவுத் திட்டம் காணப்படல் வேண்டும்

## வீரசுமன வீரசிங்க தெரிவிப்பு



பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் காணப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டம் தொடர்பில் வினவிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் –

குறுகிய காலத்தில் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக அரசாங்கம் வரிகளை அதிகரித்துள்ளதோடு நடுத்தர மக்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் அரச செலவினம் 7,885 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ள அதேநேரம் அரச வருமானத்துக்கும், அரச செலவிற்கும் இடையிலான பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கம் வரவு – செலவுத் திட்டத்தை தயாரித்துள்ளது எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

## நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் இன்றுமுதல் மீண்டும் ஆரம்பம்!

திருத்த பணிகள் காரணமாக கடந்த ஜூன் மாதம் இடைநிறுத்தப்பட்ட நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாம் அலகை இன்று (திங்கட்கிழமை) மீண்டும் தேசிய மின்கட்டமைப்பில் இணைப்பதற்கு எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய 300 மொகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டு 900 மொகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின்சார உற்பத்திக்காக 3 கப்பல்களில் நிலக்கரிஇறக்குமதிசெய்யப்பட்டுள்ளன.

மேலும் நுரைச்சோலை நிலையத்தின் மூன்று அலகுகளும் செயற்படுமாயின் குறித்த நிலக்கரி 24 நாள்களுக்கு போதுமானதாக இருக்கும் எனவும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

## சீன உயர்மட்ட தூதர் ஒருவர் இலங்கையில்!



வெளிநாடுகளுடனான நட்புறவுக்கான சீன மக்கள் சங்கத்தின் தலைவர் லின் சோங்டியன் ஐந்து நாள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ளார்.

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு சனிக்கிழமை இலங்கை வந்தார் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவையும் ஒத்துழைப்பையும் வளர்க்கும் வகையில் அவரது பயணம் அமைந்துள்ளது.

இந்தவிஜயத்தின்போது, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அரச உயர் மட்ட அதிகாரிகளை சந்திக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

## கொட்டகலையில் மருத்துவ முகாம்!



கொட்டகலை பகுதியில் இலவச மருத்துவ முகாம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

கொட்டகலை பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் இந்த முகாம் இடம்பெற்றது.

இதன்போது உயர்குருதி அமுக்கம், நீரிழிவு உள்ளிட்ட சகலவிதமான நோய்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நோயாளிகளுக்கு, சிகிச்சையளிக்கப்பட்டது. மருத்துவ முகாமுக்கு அனுசரணையை கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அச்சுவேலி வைத்தியசாலையில் பற் சிகிச்சை நிலையம் திறப்பு!





அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பற் சிகிச்சை நிலையம் மேம்படுத்தப்பட்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரனால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் இயங்கி வரும் பற்சிகிச்சை நிலையம் நீண்ட காலமாக வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வந்தது.

அந்நிலையில் நல் வாழ்வு மையத்தின் 16 லட்சம் ரூபா நிதி உதவியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் பி.சத்தியகுமார் , அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய நிபுணர் பி.குணதீபன் மற்றும் திரு.மதுரமணி இராசையா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## நெருப்போடு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடக்கில் தனியார் காணிகளை படைத்தரப்புகளுக்கும் மற்றும் அரச திணைக்களங்களுக்கும் காணிகள் தேவைப்படுகின்றன என்ற பெயரில் சுவீகரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளின் ஓர் அங்கமாகவே வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நாளை (15) செவ்வாய்க்கிழமை ஆளுநர் தலைமையில் கூட்டம் இடம்பெறவுள்ளது என்று நாங்கள் அறிகின்றோம்.

வடக்கு மாகாண ஆளுநர் நெருப்போடு விளையாடுவதற்கு முயற்சிக்கக் கூடாது. இது மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை.

காணி என்பது ஒரு மனிதரை பொறுத்தமட்டில் உணர்வுகளுடன் சங்கமித்த ஒன்று. வடக்கு மாகாண மக்கள் பல்வேறு துன்பங்கள், துயரங்களுக்கு முகம்கொடுத்துத் கொண்டு இருக்கும் நிலையில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இது பெரும்மக்கள் போராட்டத்துக்கு வழிவகுக்கும்.

மக்கள் அனைவரும் வீதிகளுக்கு வர வேண்டும்என்பதைசம்பந்தப்பட்டவர்கள் எதிர்பார்க்கிறார்களா? என்ற கேள்வியை தான் நான் எழுப்ப விரும்புகின்றேன்.

இந்த முயற்சிகள் உடனடியாகக் கைவிடப்படவேண்டும். இது மக்களுடைய அடிப்படை உரிமைகளை சுரண்டிப் பார்க்கின்ற, சவால் விடுகின்ற ஒரு முயற்சி.

காணி சுவீகரிப்பு என்பது அரசுக்கு ஒரு நியாயமான தேவைக்காக மக்கள் நலன் கருதி சுவீகரிப்பு தேவைப்படுமாக இருந்தால் அதை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால், தூர நோக்கத்தோடு வடக்கிலே காணிகளை கபளீகரம் செய்து, அரசினுடைய பிடியை, பௌத்த சிங்கள பேரினவாதத்தின் பிடியை வடக்கிலே பல்வேறு இடங்கிளிலும் இறுக்குகின்ற நோக்கத்தோடு எடுக்கப்படுகின்ற முயற்சியாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

இது இன்று நேற்று எடுக்கப்படுகின்ற முயற்சி அல்ல. கடந்த சில வருடங்களாக தொடர்ந்து பல்வேறு இடங்களில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிலத்தை அளவீடு செய்ய அதிகாரிகள் வருவது மக்கள் எதிர்ப்பு காட்டுவது மக்களின் எதிர்ப்பைக் கண்டு பின் வாங்குவது, பல சாட்டுகள் கூறி மீண்டும் அதிகாரிகள் களத்துக்கு வருவது இவையெல்லாம் பழக்கப்பட்டுப்போன சங்கதிகள். இவை எமக்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுகின்றன. இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் உண்மையான அரசியல் அந்தஸ்து என்ன என்பதை எங்கள் மத்தியில் எவராவது இதுவரை புரிந்துகொள்ள முடியாமல், உணர்ந்து கொள்ள முடியாமல் இருந்தால் அவர்களுக்கு கூட உணர்த்தக்கூடிய விதத்திலே இந்த நடவடிக்கைகள் உள்ளன.

இவற்றுக்கு நாங்கள் நிச்சயம் முகம் கொடுப்போம். இன்றைய சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு மக்கள் முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையிலே இவை முன்னெடுக்கப்படுமாக இருந்தால் பெரும் போராட்டம் ஒன்றுக்கு வழிவகுக்கும் என்பதை பணிவாகவும் நேர்மையாகவும் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த ஆளுநர் வடக்கை பொறுத்தமட்டிலே என்ன செய்துகொண்டிருக்கின்றார் என எமக்குப் புரியவில்லை. வடக்கின் நிலைமை அவருக்கு தெரியவில்லை. அவர் ஒரு தமிழர். ஆனால், அவர் தற்போது அரசின் ஒரு முகவராக வடக்கில் தமிழ் மக்களின் நலன்களுக்கு விரோதமாகச் செயற்படுவது ஒரு சாபக்கேடு.

ஆளுநர் தன்னை மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும். இல்லையெனில் அவரை இங்கிருந்து மாற்றுங்கள் என்ற கோரிக்கையை வைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் இந்த ஆளுநர் எமக்குத் தேவையில்லை. இவருக்கு பதிலாக நேர்மையான ஒரு சிங்களவரே காரியங்களைக் கொண்டு செல்ல முடியும். எடுபிடித் தமிழரை விட நேர்மையான சிங்களவர் எவ்வளவோ மேல் என நான் நம்புகின்றேன் - என்றார்.

## சர்வதேசத்துக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமூக பாதுகாப்பு, திறந்த பொருளாதாரக் கொள்கையூடாக அடுத்த 10 ஆண்டுகளில் 7 சதவீத பொருளாதார வளர்ச்சியும் 10 பில்லியன் ரூபா நேரடி சர்வதேச முதலீடுகளும் இலக்காக உள்ளது.

போட்டிச் சந்தை வாய்ப்புகள், இயற்கை பொருளாதாரம், தொழில் நுட்பம் வர்த்தகம் ஆகிய துறைகளில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படும்.

புதிய பொருளாதார சித்தாந்தத்தை உருவாக்குவதற்கான புதிய பயணத்தை உருவாக்க வேண்டும்.


52 அரச நிறுவனங்களால் வருடாந்தம் 86 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

பிரபலமான தீர்மானங்களை விட நாட்டுக்குச் சாதகமான தீர்மானங்களே இன்று அவசியமாகின்றன.

இந்தியா மற்றும் சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சில் நம்பிக்கை உள்ளது.

2.9 பில்லியன் நிதி உதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் விதித்த நிபந்தனைகளுக்கு இணங்க துண்டு விழும் தொகையைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார்.

# ரி56 ஐப் பயன்படுத்தித் தயாரான புதிய ரகத் துப்பாக்கி பிடிபட்டது



திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ரி56 ரகத் துப்பாக்கியின் பாகங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட புதிய பாணி துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கி ரி56 துப்பாக்கியின் பாகங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டதாகவும் அத்துடன் ரி56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் இருபத்தி ஒரு தோட்டாக்களும் குறித்த சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கந்தளாய் ரஜஎல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய சிவில் பாதுகாப்பு அதிகாரி எனவும் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர் தற்போது வரை சிவில் பாதுகாப்புத் படையில் சிவில் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றி வந்தார் எனவும், அக்போபுர பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபரின் வீட்டில் நேற்று முன்தினம் மாலை சோதனை மேற்கொள்ளப்பட்ட போது குறித்த துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மீட்கப்பட்ட ரி56 ரக துப்பாக்கியை போன்று தயாரிக்கப்பட்டுள்ள இந்த துப்பாக்கியானது ரி56 துப்பாக்கியின் தோட்டாக்களை பயன்படுத்தி இரவு வேளைகளில் காட்டு விலங்குகளை வேட்டையாடப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை ,மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் கந்தளாய் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டிருந்ததாக அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2022 இல் வெளியிடப்பெற்றது.